


25.03.2025

தலைப்புச்செய்திகள்

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பாக எதிர்கட்சிகளின் அமளியால் மக்களவை நண்பகல் வரை இன்று ஒத்திவைக்கப்பட்டது.
- ஊரக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஆயிரத்து 737 கிராம பஞ்சாயத்துகள் மேம்பாடு கண்டிருப்பதாக மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.
- தமிழ்நாட்டில் 5 புதிய தொழிற்பேட்டைகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்துள்ளார்.
- நாட்டின் பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழகத்தில் சொத்துவரி குறைவாக உள்ளது என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு கூறியுள்ளார்.
- மியாமி ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி போர்சுகலின் நுனோ இணை முன்னேறியுள்ளது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

நாடாளுமன்றம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்படாத பிரச்சனை காரணமாக எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை நண்பகல் வரை இன்று ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது திமுக, காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள், தமிழகம் மேற்குவங்கம் உள்ளிட்ட எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதி ஒதுக்கப்படவில்லை என கூறி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டன.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த ஊரக மேம்பாட்டுத்துறை இணை அமைச்சர் திரு.சந்திரசேகர் பெம்பசானி, மேற்கு வங்கத்தில் இந்த திட்டத்திற்கான நிதி திருப்பிவிடப்பட்டதாகவும், முறைகேடுகள் நடைபெற்றதாகவும் சுட்டிக்காட்டினார்.

தமிழகத்தை பொறுத்தவரை நிலுவை ஊதியத்திற்கு வட்டி வழங்கும் நடைமுறை இருப்பதாகவும், 7 ஆயிரத்து 300 கோடி ரூபாய் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுதாகவும் எடுத்துரைத்தார்.

மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.ஷிவ்ராஜ் சிங் சவ்ஹான் பேசுகையில் பணியாளர்களுக்கு நிலுவை ஊதியம் வழங்க அரசு முனைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

எந்த மாநிலத்திற்கும் மத்திய அரசு பாரபட்சம் காட்டுவதில்லை என்று தெளிவுபடுத்திய அவர் நிதி ஒதுக்கீடு தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்க தமிழக மேற்குவங்க அரசுகளை கேட்டுக்கொண்டார்.

அமைச்சரின் பதிலில் திருப்தி அடையாத எதிர்கட்சி உறுப்பினர்கள் அவையில் அமளியில் ஈடுபட்டனர்.

மக்களவை தலைவர் திரு.ஓம்.பிர்லா பேசுகையில் மாநில பிரச்சனைகளை நாடாளுமன்றத்தில் எழுப்பி அவை நடவடிக்கைகளுக்கு ஊறுவிளைவிப்பது முறையான செயல் அல்ல என்று குறிப்பிட்டார்.

மற்றொரு கேள்விக்கு பதில் அளித்த திரு.ஷிவ்ராஜ் சிங் சவ்ஹான் ஊரக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஆயிரத்து 737 கிராம பஞ்சாயத்துகள் மேம்பாடு கண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

மனிதவளம், சமூக நலன், பொருளாதார வளர்ச்சி, சமூக பாதுகாப்பு, அடிப்படை வசதிகள் உள்ளிட்டவை இந்த வளர்ச்சியில் அடங்கும் என்று கூறினார்.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூ

பிரல்ஹாத் ஜோஷி – நாடாளுமன்ற வளாகம்

கர்நாடக துணைமுதலமைச்சர் சிறுபான்மையின இட ஒதுக்கீடு தொடர்பாக கூறப்பட்டதாக சொல்லப்படும் கருத்துக்களால் அரசியல் சாசனத்திற்கு அவதூறு இழைக்கப்பட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும் மத்திய அமைச்சருமான திரு.பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதற்காக காங்கிரஸ் கட்சியும், கர்நாடக துணை முதலமைச்சரும் மன்னிப்பு கோர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூ

ஜார்ஜ் குரியன்

மாநில சிறுபான்மையின ஆணையங்களின் மாநாட்டை மத்திய சிறுபான்மை விவகாரங்களுக்கான இணை அமைச்சர் திரு.ஜார்ஜ் குரியன் புதுதில்லியில் இன்று துவக்கிவைத்தார்.

கல்வி, அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சிறுபான்மையினருக்கு அதிகாரம் அளித்தல் போன்றவை குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

சிறுபான்மையினருக்கு சம வாய்ப்புகள் வழங்குவதையும், அவர்களின் நலனை பாதுகாப்பதற்கான நிலைபாடுகள் போன்றவை குறித்து இதில் ஆலோசிக்கப்படுகிறது.

நாட்டில் சிறுபான்மையின சமூக மக்கள் மேம்பாட்டிற்கான கொள்கை பரிந்துரைகள், அதுசார்ந்த பேச்சுவார்த்தைகள், ஆளுமைக்கான ஒருங்கிணைந்த முயற்சிகள் உள்ளிட்டவற்றை நோக்கமாக கொண்டு இந்த மாநாடு நடைபெறுகிறது.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூ

மனித உரிமைகள் ஆணையம்

நெல்லை மாவட்டத்தில் ஓய்வுபெற்ற காவல்துறை ஆய்வாளர் கொலை செய்யப்பட்ட வழக்கை தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு ஏற்றுள்ளது.

உயிரிழந்தவர் உயிருக்கு ஆபத்து இருப்பதாக வீடியோ வெளியிட்ட பின்னரும் நடவடிக்கை எடுக்காததற்கான காரணத்தை நான்கு வாரங்களுக்குள் அளிக்க தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குனர் மற்றும் நெல்லை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு ஆணையம் நோட்டிஸ் அனுப்பியுள்ளது.

வக்.ஃப் வாரிய இடம் தொடர்பான பிரச்சனையில் இக்கொலை சம்பவம் நடைபெற்றதாக பத்திரிக்கையில் வெளியான செய்தியின் அடிப்படையில் தேசிய மனித உரிமைகள் ஆணையம் இவ்வழக்கை கையில் எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

முதலமைச்சர்

மாநில உரிமைகளை நிலைநாட்டவும் தமிழ் மொழியை காக்கவும் இரு மொழி கொள்கை மற்றும் மாநில சுயாட்சி தொடர்பான முக்கிய அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இருமொழி கொள்கை தொடர்பான கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு இன்று பதில் அளித்து பேசிய முதலமைச்சர் தமிழ் ஆங்கிலம் என்ற இருமொழி கொள்கையே தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

தமிழ்நாட்டிற்கு மத்தியஅரசு உரிய நிதி வழங்காவிட்டாலும் தாய்மொழியை காப்பதில் மாநில அரசு உறுதியுடன் இருக்கும் என்றார்.

எம்மொழிக்கும் தமிழக அரசு எதிரானது அல்ல என்றும் எந்தமொழியையும் கற்க தடைவிதிக்கவும் இல்லை என்று கூறிய முதலமைச்சர் மொழி ஆதிக்கத்தை தான் எதிர்ப்பதாக கூறியுள்ளார்.

முன்னதாக அஇஅதிமுக பா.ம.க காங்கிரஸ் விடுதலை சிறுத்தை உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் மாநில அரசு ஒருபோதும் மும்மொழி கொள்கையை ஏற்க கூடாது என்றும், இருமொழி கொள்கையில் உறுதியான நிலைப்பாட்டோடு இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இதுதொடர்பான மாநில அரசின் முடிவிற்கும் முதலமைச்சர் கொண்டு வந்த தீர்மானத்திற்கும் ஆதரவு அளிக்கப்படும் என்றும் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

முதலமைச்சர்

காஞ்சிபுரம், கடலூர், திருவாரூர், சேலம், தூத்துக்குடி மாவட்டங்களில், 5 தொழிற்பேட்டைகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி வாயிலாக இன்று திறந்துவைத்தார்.

மாநில அளவில் சிறந்த பட்டு விவசாயிகள், விதைக்கூடு உற்பத்தியாளர்களுக்கு மொத்தம் 8 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான காசோலைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

சிறந்த தானியங்கி மற்றும் பல்முனை பட்டு நூற்பாளர்களுக்கு பரிசுத்தொகைகளையும் அவர் வழங்கினார்.

சேலம் அரியகவுண்டம்பட்டியில் 57 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அடுக்குமாடி வெள்ளிக்கொலுசு உற்பத்தி வளாகத்தையும் முதலமைச்சர் திறந்துவைத்தார்.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

கே.என்.நேரு – சட்டப்பேரவை

நாட்டின் பிற மாநிலங்களின் மாநகராட்சி நகராட்சிகளை ஒப்பிடுகையில் தமிழகத்தில் சொத்துவரி குறைவாக இருப்பதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் நகராட்சி நிர்வாகத்துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் இன்று குறுக்கிட்டு பேசிய அவர் சென்னை உள்ளிட்ட மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் மத்திய அரசின் வலியுறுத்தலுக்கு ஏற்பவே சொத்து வரி சீரமைப்பு மேற்கொள்ளப்பட்டதாக கூறினார்.

முன்னதாக பேரவையில் வெளியிடப்பட்ட நகராட்சி நிர்வாக மானியகோரிக்கை கொள்கை விளக்க குறிப்பில், திருச்சி மாவட்டத்தில் அம்ருத் 2-ம் கட்ட திட்டத்தின்கீழ் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டப்பணிகள் 230 கோடியே 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

பஞ்சப்பூரில் நவீன தொழில்நுட்ப முறையில் 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன்கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி 233 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருவதாக கூறினார்.

சேலம் மாநகராட்சியில் 758 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் விநியோகப்பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளதாக தெரிவித்தார்.

50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயிரி எரிவாயு நிலையம் அமைத்து பராமரிக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளதாக கூறினார்.

காவிரி மற்றும் வைகை ஆற்றை நீராதாரமாக கொண்டு கரூர் திருச்சி திண்டுக்கல் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க 3 கூட்டுக்குடிநீர் திட்டங்களுக்கு 2 ஆயிரத்து 179 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கவன ஈர்ப்பு - மக்கள் நல்வாழ்வுதுறை

தமிழ்நாட்டில் அரசு தலைமை மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவையான மருந்து மாத்திரைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்பிற்கு பதில் அளித்த அமைச்சர் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் மூலம் 3 கோடியே 25 லட்ச ரூபாய் செலவில் 38 மாவட்டங்களுக்கும் தேவையான கொள்ளை நோய் தடுப்பு மற்றும் சிறப்பு மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டிருப்பதாக கூறினார்.

அனைத்து அரசு மருத்துவமனைகளில் உள்ள மருந்துகளின் இருப்பு விவரங்கள், மருந்து விநியோக மேலாண்மை அமைப்பின் மென்பொருளின் மூலம் கண்காணிக்கப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கேள்விநேரம்

தமிழ்நாட்டில் தனியார் சோலார் மின் உற்பத்தி கூரை அமைப்பதற்குரிய அனுமதி விரைவில் வழங்கப்படும் என்று மாநில மின்சாரத்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது இன்று இதனை தெரிவித்த அவர் தஞ்சை மாவட்டத்தில் 16 இடங்களிலும்,

பட்டுக்கோட்டை தொகுதியில் இரண்டு இடங்களிலும் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்றார்.

பனை சார்ந்த பொருட்கள் கைபேசி செயலி மற்றும் இணையதளம் வாயிலாக விற்பனை செய்யப்படுவதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதனை தெரிவித்த அவர் தமிழக அரசு பனை தொழில் வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக கூறினார்.

வாய்ஸ்

கேள்வி நேரத்தின்போது வெளியான மேலும் சில தகவல்கள்

தமிழ்நாட்டில் தேவைப்படும் பகுதிகளில் தகுதி அடிப்படையில் புதிய வட்டாச்சியர் அலுவலகங்கள் கட்டப்படும் என்று மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி ஒன்றியம் தேவர் கண்டநல்லூர் கிராமத்தில் உள்ள நிர்வாக அலுவலக கட்டிடம் விரைவில் புதுப்பிக்கப்படும் என்றார்.

சேலம் மாவட்டம் கெங்கவல்லி தொகுதி தம்மம்பட்டி பேரூராட்சி பகுதியில் அடுத்த மாதம் 25ஆம் தேதிமுதல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்று மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் தொகுதிக்குட்பட்ட ஆலங்குடி குரு ஸ்தலம் 5 கோடியே 30 லட்ச ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்று மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

தஞ்சை பெருவுடையார் கோவிலை மேம்படுத்த மத்திய அரசு 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் இதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்றும் கூறினார்.

தென்காசி மாவட்டம் பொட்டல்புதூர் கிராமத்தில் அமைந்துள்ள மொய்தீன் ஆண்டவர் தர்கா இந்தாண்டு மேம்படுத்தப்படும்.

முல்லை பெரியாறு அணையை கட்டமைத்த பென்னிகுயிக் நினைவிடத்தில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும் என்றும் கூறினார்.

ஆவின் நெய் உலக தரத்தில் தயாரிக்கப்பட்டு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு.ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

ஆவின் உற்பத்தி உப பொருட்கள் அனைத்தும் தரமானதாக இருப்பதாக அவர் எடுத்துரைத்தார்.

கரூர் மாவட்டம் குளித்தலை அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோவில் வளாகத்தில் புதிதாக திருமண மண்டபம் கட்டப்படும் என மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு கூறினார்.

இத்திருக்கோவிலில் போதுமான நிதி வசதி இல்லாததால் பெரிய திருக்கோவில்களின் நிதியிலிருந்து இத்திருமண மண்டபம் விரைவில் அமைக்கப்படும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

வேலூர்

வேலூர் மாவட்டத்தில் பெண்குழந்தைகளை பாதுகாப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் 10ஆவது ஆண்டு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

பெண்குழந்தைகளின் பாதுகாப்பை நோக்கமாக கொண்டு இந்த பேரணி நடைபெற்றதாக மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் உமா தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஆடு

புனித ரமலான் பண்டிகையை முன்னிட்டு நெல்லை மேலப்பாளையம் ஆட்டுசந்தையில் 2 கோடி ரூபாய் வரை விற்பனை நடைபெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கோவில்

ஈரோடு மாவட்டம் அருள்மிகு பன்னாரி அம்மன் திருக்கோவில் குண்டம் திருவிழா பூச்சாட்டுதலுடன் இன்று தொடங்கியது.

முக்கிய நிகழ்வான குண்டம் இறங்குதல் வரும் 7, 8 தேதிகளில் நடைபெறும்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

டென்னிஸ்

மியாமி ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி போர்சுகலின் நுனோ இணை முன்னேறியுள்ளது. நாளை நடைபெறும் காலிறுதியில் இந்த இணை பிரிட்டன் இணையை எதிர்கொள்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் அஹமதாபாத்தில் இன்று இரவு ஏழரை மணிக்கு குஜராத் டைட்டன்ஸ் - பஞ்சாப் கிங்ஸை எதிர்கொள்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கால்பந்து

ஷில்லாங்கில் நடைபெறும் ஆசியகோப்பை கால்பந்து போட்டியின் தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று இரவு 7 மணிக்கு பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது